அதோடு சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அனந்தபுரம் பகுதி பணிமனையினுடைய ஆக்கிரமிப்பு என்பது முந்தைய ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டவை. அபகரிப்பு, ஆக்கிரமிப்புகள் எல்லாம் முந்தைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் நடைபெற்றவைதான். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பணிமனையினைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, அங்கு புதிய பணிமனை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***20084—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கத் தேவையான நிலத்தைக் கண்டறியுமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து செயற்குறிப்பு வரப்பெற்றவுடன் விழுப்புரத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் பரப்பளவில் மிகப் பெரிய மாவட்டமாக இருந்தாலும், கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பின்தங்கிய மாவட்டமாகவே திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்திருப்பதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, அந்தப் பகுதி மக்களுக்கு, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் மென்பொருள் பயிற்சி முகாம்கள் உள்ளடக்கிய அந்தத் தொழில்நுட்பப் பூங்காவை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக எட்டு எல்கோசெஸ் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த நிறுவனங்களில் சுமார் 3,75,000 நேரடி தொழிலாளர்களும் 7,50,000 மறைமுகத் தொழிலாளர்களும்*

வேலைவாய்ப்பு வழங்குகிற நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். (மேசையை தட்டும் ஒலி). அதன் அடிப்படையிலே, விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாகக் கருத்துரு பெற்று, அங்கே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற நிலையை உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–50

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில், கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், வேலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்படும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, வேலூரிலே அதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய, சென்னையிலுள்ள ஒரு நிறுவனத்திற்குப் பணி ஆணை கடந்த ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி அன்று அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிறுவனத்திடமிருந்து அனைத்து ஆவணங்களும் பெற்று, வேலூர் மாவட்டத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவார்கள் என்பதையும் இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

176—

அரசு விழா

***28357—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—